# கண்ணனும் காந்தாரியும்

எல்லோருக்கும் பொதுவாகத் தெரிந்த ஒரு புராணப் பாத்திரம் காந்தாரி. மகாபாரதக் கதையில் வரும் காந்தாரி குருவம்சத்தைச் சேர்ந்த திருதராஷ்டிரனை மணந்தாள்.

திருதராஷ்டிரன் பிறவிக்குருடர். ஆகையால் பதிபக்தியின் காரணமாக காந்தாரி தனது கண்களைக் கட்டிக்கொண்டே வாழ்ந்தாள்.

அவளது உயர்ந்த பதிபக்தியின் காரணமாக காந்தாரி பல சக்திகளைப் பெற்றிருந்தாள். தன் மக்கள் போரில் அழியக் காரணமாக இருந்த கிருஷ்ணனை காந்தாரி கிருஷ்ணனின் யாதவ குலம் அழிக்கச் சபித்தாள். இதுவே யாதவகுல அழிவுக்குக் காரணமாக அமைந்தது.

இந்தப் பின்னணியில் காந்தாரி பாத்திரத்தை பேராசிரியர் கு.நா. சுந்தரேசன் ஒரு புதிய கோணத்தில் இந்த ஓரங்கநாடகத்தில் சித்தரிக்கிறார்.

**********

# கண்ணனும் காந்தாரியும்[1]

(ஓரங்க நாடகம்)

## நாடக பாத்திரங்கள்

காந்தாரி, கண்ணன்

இடம்: குருக்ஷேத்திரப் போர்க் களம்

****

**காந்தாரி:** இங்கே யார் வருகிறது? நான் அமைதி தேடி இங்கே வந்தேன், என்னைத் தனியே விடுங்கள்! ஒரு வேளை நரியோ — நானும் இறந்த பிணம் என்று கருதி வருகிறதோ—இப்பொழுது திரும்பி போகிறது போலிருக்கிறது!

**கண்ணன்:** தாயே, நான் உனக்கு சாந்தியளிக்கவே வந்திருக்கிறேன், கண் திறந்து என்னைப் பார்!

**காந்தாரி:** ஏமாற்றுக்காரன்! நான் உன்னை முன்னால் பார்த்ததில்லை. இப்பொழுதும் கண்ணைத் திறந்து கொள்ள அவசியமில்லை! நீ யார்?

**கண்ணன்:** இந்த மண் மீதிலே சிதறிக் கிடக்கும் பிணங்களையும், தவிடு பொடியாய் நொறுங்கிக் கிடக்கும் பொருள்களையும் பார்க்க முடியாத வண்ணம் உன்னைக் காப்பாற்றிய கடவுளுக்கு நீ வந்தனமே கூற வேண்டும்!

**காந்தாரி:** இது கிருஷ்ணன்தான்! கோக்களை பாவிக்கும் கிருஷ்ணனில்லை, ஆனால் . . .

**கண்ணன்:** ஆறுதலளிக்கும் தூதன்!

**காந்தாரி:** சாபமிடும் நாமிடுக்குத் தூதன்! சகோதரர்களுக்குள் வெட்டி மடியும் இந்தக் கோர யுத்தத்தின் கொடுமைகள் தோன்றாமல் உன் நாவினால் தடுத்திருக்கலாம்—ஆனால் நீயோ சங்கநாதஞ் செய்து பகைமையே மூட்டினை! என் புத்திரர்களைத் தொலைத்தனை, அராஜக தூதனே! இப்பொழுது தனியே தளர்ந்து விழும் எனக்கு என்ன செய்தி கொணர்ந்துளாய்?

**கண்ணன்:** உனது நாயகன் துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறான். உனது வீரச் சாந்தியுடன் நீ வந்து, அவனுக்குத் தேறுதல் கூறி, அவனுடைய புண்ணை ஆற்று! வா!

**காந்தாரி:** அவர் சிறிது நேரம் தம்மைத் தனியே விட்டு விட்டுப் போகச் சொன்னார் — அதனால்தான் நான் வந்தேன். நீ அங்கே போ. வீரம் மிகுந்த நூற்று வீரரைப் பெற்ற தந்தை, ஒரு கோழையின் துருப்பிடித்த கத்திக்கு இரையாக மரிக்காமல் பார்த்துக்கொள். அந்தோ! பழமை மிக்க குருவம்சம் — காடும் மலையும் தாண்டி, கடல் மடை திறந்ததுபோல் ஓடி வந்து— அந்தோ! அந்த ராஜ வம்சத்தின் உதிரம் இப்பொழுது பசையறக் காய்ந்த பாலைவன மணலிலா பாய்ந்து மறையவேண்டும்?

---

[1] ஆசிரியரின் ஆங்கில முதல் நூல் **The Cause** என்ற நாடகத்தை, மணிக்கொடி பத்திராதிபர், ஆகஸ்ட் 1, 1939 மொழிபெயர்த்து வெளியிட்டது.

**கண்ணன்:** கண்களைத் திறந்து பார்க்கக்கூடாதென்று ஆதிமுதல் நீ முடியிட்டு மறைத்துக் கொண்டிருப்பதால், நல்ல வேளையாக, உன்னைச் சுற்றிலும் சிதறிக் கிடக்கும் இந்த பயங்கரங்களை நீ கண்டு துயரப்படாமலிருக்க முடிகிறது!

**காந்தாரி:** ஆனால் செவிகளின் மூலம் கண்களும் விழிப்படைகின்றன. அந்தகாரம் கனமாயும் அதிகக் கருமையாகவும் இருப்பதற்குத் தக்கபடி நட்சத்திரங்கள் அதிகமாய்ப் பிரகாசிப்பவே என் கன்னிப்பருவத்தில் நான் நட்சத்திரங்களைப் பார்த்திருக்கிறேன், கண்ணா! இப்பொழுது விடியற்காலம் கீழ்த்திசையில் செவ்வொளி பரவுவதால் என் கண் இருளும் சிவக்கிறது . . . ஆனால் தேரேறி வரும் கதிரவனை வெற்றிக் கீதமும் வேத பாராயணமும் வரவேற்பதற்கில்லை. நரிகளும், ஓநாய்களும், பருந்துகளும், கழுகுகளும் கர்ண கடூரமாக ஊளையிட்டும், கூவியும், கோரமான நித்திய நித்திரையில் வீழ்ந்துவிட்ட என் பாரதக் குழந்தைகளைத் தாலாட்டுகின்றன . . .

**கண்ணன்:** குழைந்தைகளா! தாயே, அவர்களை உலகம் வீரர் என்று போற்றுகிறது. அவர்கள் போர்க்களத்தில் கண்ணியமாகப் போராடினார்கள். உன் மடியில் புகுந்து அவர்கள் ஒளிந்து கிடக்கவில்லையே!

**காந்தாரி:** ஐயோ, எப்பொழுதுமே அவர்கள் என் மடியிலேயே இருந்திருக்கலாகாதா! எல்லாம் உன் வேலை, கிருஷ்ணா! நீ சமாதானத் தூதனாக வந்தாய், ஆனால் உன் உள்ளம் முன்னதாகவே யுத்தத்திற்குத் தயாராக இருந்தது! உள்ளந் தளர்ந்து, பச்சாத்தாபத்துடன் பரிதவித்துக்கொண்டிருந்த அர்ச்சுனன் கையிலிருந்து காண்டீவம் தளர்ந்து விழுந்தபொழுது, மனிதக் காடுகளை அரிந்து தள்ளும் இந்தப் பயங்கரமான கொலைத் தொழிலைச் செய்து முடிக்கும்படி அவன் தளர்ந்த கையைத் திண்ணியதாக உயரச் செய்ததுதான் உன் கடமையோ? உன் ரதத்தைத் திருப்பிக்கொண்டு போவதற்கென்ன? ஏ, பார்த்தசாரதி! போர்முனையில் எதிர்த்து நின்ற இரு பக்கத்தாரும் சமாதானமாய்ப் போகட்டுமென்று நீ ஏன் ரதத்தைத் திருப்பிக்கொண்டு செல்லவில்லை?

**கண்ணன்:** அப்படிச் செய்திருந்தால் என் தலையில் எத்தகைய சாபம் வந்து விழுந்திருக்கும்! தெய்வங்களெல்லாம் சேர்ந்து கூட அந்தச் சாபத்தைத் தாங்கியிருக்க முடியாது!

**காந்தாரி:** எல்லோரும் நீ கடவுளென்றும், இந்த அநித்தியமான பூமியில் அவதரித்திருக்கிறாயென்றும் சொல்லுகிறார்களே. நான் அந்த வதந்தியை எப்பொழுதுமே நம்பியதில்லை, இந்தப் பாரதப்போரில் நீ நடந்து கொண்ட மோச முறையைக் கண்டபின் இனி எப்பொழுது அப்படி நம்பவும் முடியாது!

**கண்ணன்:** நான் ஒரு மனிதன்தான், நானும் அநித்தியமான ஒரு ஜீவன்தான். என்னைத் தொட்டுப்பார், தாயே. இரண்டு கைகள்தான், நான்கு கைகளில்லை! (*அவள் வலக்கரத்தை எடுத்துத் தன் இரு புஜங்களையும் தொட்டுக்காட்டுகிறான்*)

**காந்தாரி:** ஆம், ஆம்! நீ ஒரு மானிடன்தான். ஒரு சாபத்தால் உன்னை நசுக்கி விட முடியும்! அநீதி இழைக்கப்பட்ட ஒரு தாயின் கொலைச் சாபத்தால்!

**கண்ணன்:** தாயே. உன் இஷ்டம்போல் என்னைச் சபித்திடு. ஆனால் வீரம் மிக்க காந்தாரியின் இன்னிசை இதழ்களிலிருந்து ஒரு சாபமும் வெளிவராதென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்!

**காந்தாரி:** ஆனால் இயற்கையின் சட்டங்களையும் தப்பிவிடலாம் என்று நீ எண்ணுகிறாயா? பதினெட்டு நாள், இரவும் பகலும் இந்தக் குருக்ஷேத்திரத்தில் நிகழ்ந்த பயங்கரங்கள் எல்லாம் உன் நாட்டில் உன் யாதவ மக்களிடையே கலகமாகப் பரிணமிக்காதென்று எண்ணுகிறாயோ? என்

அரண்மனையில் மாதர்கள் கதறுவதுபோல் உன் நாட்டுப் பெண்டிரும் சோகத்தில் நொந்து சாம்பிக் கதறுவார்கள். தீமை விளைத்த தீ. நீ இதை எப்படித் தப்ப முடியும்?

**கண்ணன்:** இதற்குள் உன் இதழ்களிலிருந்து ஒரு சாபம் வெளி வந்துவிட்டதே! பவளம் போன்ற இதழ்கள் என்று எண்ணினேன், இல்லை, உதிரம் போன்ற இதழ்கள்.

**காந்தாரி:** இதிலிருந்து முப்பத்தாறாவது வருஷத்தில், துவாரகையில் உன் யாதவர்கள் துரதிஷ்டம் பிடித்து, தங்களுக்குள்ளே போராடி அங்கும் ஒரு க்ஷேத்திரத்தை ஏற்படுத்துவர் பார். உனது உற்றாரும் உறவினரும் தம் வாளாயுதங்களே பழி வாங்க, மடிவர். நீயும் தனியே மடிவாய்! காதில் விழுகிறதா?

**கண்ணன்:** அப்படியானால் இருக்கட்டும்! அன்னையே! இத்தனை சாபத்தையும் கண்ணீரையும் கக்கிய பிறகாவது உன் உள்ளம் ஆறுதலடையட்டும்! தாயே, காந்தாரி! நீ சுகமாயிருக்க வேண்டும்.

**கண்ணன்:** வெட்கங்கெட்ட கண்ணா! என்னை இதற்காக வாழ்த்தவா செய்கிறாய்? எனக்கே அவமானமாயிருக்கிறது. பாண்டவர்கள், என் செல்வக் குழந்தைகளைக் கொலை செய்துவிட்டார்கள். அவர்களைப் பற்றி ஏதேனும் நான் நிந்தித்தேனா? தெய்வம் என் வாயை அடைத்துவிடட்டும்! ஆனால் அவர்கள் அடைந்த இந்த வெற்றி என்ன வெற்றி! சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சூரியனைக் கருமேகங்கள் சூழ்ந்து மறைத்தது போன்ற வெற்றி. வெற்றியடைந்தபின் வெற்றியைக் கொண்டாடுவதற்குக்கூடச் சக்தியில்லாமற் செய்த வெற்றி. லட்சத் தீபங்களும் தோரணங்களும் கொண்டு, கொண்டாடத் தகாத, குழப்பமே மிக்க வெற்றி! ஜெயமடைந்தவர் கண்ணீரும் மாண்டொழிந்தவர் உதிரமும் கலந்தோடும் வெற்றி!

**கண்ணன்:** மேகமண்டலங்கள் சூழ்ந்தால்தானே உலகம் மழையை எதிர்பார்த்து வரவேற்கிறது! தாயே, இடிக்குரல் கேட்டுத்தானே மயிலினம் களிகொண்டு, பல வண்ணச் சிம்மாசனத்தில் கொலுவிருப்பதுபோல், தோகை விரித்தாடுகின்றது?

**காந்தாரி:** மயிலா? அது எங்கே இருக்கிறது? கோபுரத்திலிருந்து கழுகுகளும் ராஜாளிகளுமல்லவா கத்துகின்றன? மயில் சிம்மாசனத்திலிருந்து ஓடி விட்டது. ராஜாளிகள் புனிதக் கோபுரத்தில் அமர்ந்து கொக்கரிக்கின்றன. தம் பைசாசக் கண்களால் இதை தேடிப் பார்க்கின்றன!

**கண்ணன்:** என்னை சபித்தாய், காந்தாரி! நான் கோபங்கொள்ளவில்லை. ஆனால் பாண்டவர்களை ராஜாளிகள் என்று சொல்லாதே.

**காந்தாரி:** என் மக்கள்தான் மயில்கள். ஐயோ!அவர்களுக்கேன் அபஜயம் வந்தது?

**கண்ணன்:** அவர்கள் தோல்வியை எதிர்க்கொண்டழைத்தார்கள்!

**காந்தாரி:** ஞானமும் போதமும் அவர்களுக்காகப் போராடினவே! துரோணனோ?

**கண்ணன்:** துரோணர் ஞானத்தையும் போதத்தையும் விற்பனையல்லவா செய்தார்? செல்வம் மிகுந்த சீடர்களை ரொம்பப் பேணினார் . . .

**காந்தாரி:** *(கண்ணன் வாய்க்கு நேராகக் கையைத் தூக்கி)* காது செவிடும்படி என்ன பிதற்றுகிறது உன் நாக்கு? வெளியே பிடுங்கி எறிவேன் உன் நாக்கை . . .

**கண்ணன்:** (சிறிது பொறுத்து) அம்மா . . . மந்தமான பையனிடந்தான் குரு அதிக கவலை செலுத்துவார். மாண்புமிக்க துரோணர் உன் மைந்தனுக்குத் தம் அறிவுப் பொக்கிஷத்தைக் கொடுத்தார்!

**காந்தாரி:** என் மைந்தனா மந்தன்?

**கண்ணன்:** துரோணன் அவனுக்கு அறிவை அள்ளிக் கொடுத்தார் என்று நான் சொல்லவில்லையே தாயே?

**காந்தாரி:** கர்ணனுக்கு என்ன! வரையாது கொடுக்கும் வள்ளன்மைக் கவசம் பூண்ட மைந்தன்! இருந்தாலும் . . .

**கண்ணன்:** வள்ளன்மை ஹிருதயத்தையும் கைகளையும் திறந்து காட்டி விடுகின்றது. கவசத்தில் ஒரு ஓட்டை! பகைவனின் அம்பு பாய்ந்து அவனைக் கீழே தள்ளிவிடுகிறது!

**காந்தாரி:** ஏ கிருஷ்ணா! கர்ணனின் வள்ளன்மை என் துரியோதனனுடைய வள்ளன்மையிடம் பிச்சை வாங்கவேண்டும்! துரியோதனன் தேர்ப்பாகனைத் தூக்கி அங்க நாட்டின் சிம்மாசனத்தில் வைத்தவனல்லவா!

**கண்ணன்:** கர்ணனைப்பற்றி நான் மேலும் சொல்லட்டுமா? வெளியில் எங்கும் பரவிவரும் கதையை நீ கேட்டிருக்கிறாயா?

**காந்தாரி:** அவன் காட்டிக் கொடுத்தான் என்றால் நான் ஆச்சரியப்படமாட்டேன். ஆனால் தவமும், தியாகமும் என் மக்கள் பக்கந்தானே போராடின! பீஷ்மன் எப்படி வீழ்ந்தான்? அவனும் காட்டிக்கொடுத்தானா?

**கண்ணன்:** வஞ்சனைகளைப் பற்றிப் பேசவேண்டாம், தாயே! உங்கள் துணைவர்கள் விசுவாசத்துடன்தான் இருந்தார்கள். பூமிக்கு புதையுண்டோரைப்பற்றி நாம் அவதூறு பேசவேண்டாம்! வயது முதிர்ந்த கிழம், பண்டை நாளில் எத்தனை எத்தனையோ மாறுதல்களைக் கண்டது. மேற்கொண்டு மாறுதலை விரும்பவில்லை! கல்லறையைப் பக்கத்திலே கண்டதும், தானே ஓடிச் சென்று உள்ளே விழுந்துவிட்டது! உன் மக்களும் அத்துடன் வீழ்ந்துவிட்டனர்!

அம்மா, அழாதே! உன் கண்ணீரைத் துடைப்பதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்? ஆனால் கண்ணீர் வெளியில் வழிவதேயில்லை. கண்களைச் சுற்றிக் கட்டியதால் நுரை போன்ற மெல்லிய துணி அதை உறிஞ்சிவிடுகிறது. நீர் ஊற்று மண்ணிலேயே மறைந்துவிடுகிறது!

**காந்தாரி:** கைகளை எடு, அயோக்கியா! அடே, போக்கிரி, என்னைத் தீண்டாதே! என் சாபத்தை வாங்கிக்கொண்டு தொலை!

**கண்ணன்:** அன்னாய், நான் போகிறேன். உன் சாபத்திலிருந்து நான் தப்பாமல் ஏற்றுக் கொள்ள உனக்கு இன்பமளிக்குமானால், அப்படியே அதை வரவேற்கிறேன். யாதொரு ஆட்சேபணையுமில்லை. சந்தோஷமாய் ஏற்கிறேன். புனித நீரை அர்க்கியமாக ஊற்றி அத்துடன் அந்தச் சாபத்தையும் தாரை வார்த்துவிடு! கொஞ்சம் இரு, ஒரு கிண்ணத்தில் தண்ணீர்க் கொண்டு வருகிறேன்.

**காந்தாரி:** *(அழுதுகொண்டு)* நான் இங்கு தங்கமாட்டேன். எங்கேனும் தொலை! என்னை மறுபடி வந்து பாராதே! *(துக்கிக்கிறாள்)*

**கண்ணன்:** *(அவளைப் பின்தொடர்ந்து ஓடிக்கொண்டு)* அப்படியானால், இதோ இருக்கிறது கொதிக்கும் தண்ணீர்! *(அவள் கண்களில் கட்டப்பட்டிருந்த துணியின் முடிச்சை அவிழ்க்கிறான்)*

**காந்தாரி:** பாவி! படுபாவி! வாழ்நாள் பூராவும் பாதுகாத்து வந்த என் கற்பைக் கறைப்படுத்திய கொடியா! மாண்டவர் போக ஜீவித்திருக்கும் என் அன்பான ஓர் உயிருக்கும் துரோகியாக்கினை என்னை . . .

**கண்ணன்:** உன் சாபத்தை திரும்பச் சொல்லு தாயே! உன் கண்ணீரை இதோ கை நிறைய ஏந்திவிட்டேன். சாபத்தை மீண்டும் சொல்லிக் கண்ணை விழித்து உன் இனிய சாபக் கண்ணீரை நான் பருகுவதைப் பார்!

**காந்தாரி:** ஒரு சாபம் மட்டுமா? சபித்துக்கொண்டேயிருப்பேன்! *(அவள் கண் இமைகளை திறக்கிறாள்)*

**கண்ணன்:** சொல் உன் சாபம்!

**காந்தாரி:** என்ன இது? கட்டவிழ்த்தாகிவிட்டது, இமைகள் திறந்திருக்கின்றன. ஆனால் ஒன்றுமே தெரியவில்லையே!

**கண்ணன்:** ஆச்சரியம்! உன் கண்களில் கருமணிகளைக் காணேன்! நாம் நிற்கும் இந்தப் போர்க்களம் அதில் பிரதிபலிக்கக் காணேன்! வாஸ்தவத்தியே நீ குருடா?

**காந்தாரி:** ஆமாம், அப்படித்தான் இருக்கிறேன். இந்த ஏமாற்றுக்காரியான காந்தாரியைப் பற்றி உலகம் என்ன நினைக்கும்? குருடி குருடனை விவாகம் செய்துகொண்டாள்! கிருஷ்ணா, நான் கன்னியாயிருந்தபொழுது, குருடாக இருக்கவில்லை. நக்ஷத்திரங்கள், மலர்கள் கண்டுள்ளேன். நீ தெய்வந்தான் போலிருக்கிறது. என் கண்களை என்ன மாயம் செய்துவிட்டாய்! (இமைகளை நன்றாய்த் திறந்து கொண்டு) கட்டில்லாமலே இப்பொழுது நான் குருடாயிருக்கிறேனே!

**கண்ணன்:** தெய்வம் உனக்குக் கண்கள் கொடுத்தது. நீ அவற்றை மறுத்தாய், அவற்றைத் துர்விநியோகப்படுத்தினாய், அவைகள் போய்விட்டன! இப்பொழுது அதற்காக வருந்துகிறாயா?

**காந்தாரி:**ஒரு நாளுமில்லை. எனக்கு இனிமேல் துணியால் கட்ட வேண்டியதேயில்லை, கண்கள் சுயமாகவே தெரியாமலிக்கின்றன! நல்ல வேளை. என் விழிகள் ஒளியில் மலரா மொக்காகவே இருக்கட்டும். என்னை நிரந்தரக் குருடாக்கிவிடு!

**கண்ணன்:** (புன்னகைப் புரிந்து) நீ விரும்புகிறபடியே, இருக்கும். கவலை வேண்டாம்.

**காந்தாரி:** *(சிந்தனையிழந்து)* இந்தப் பயங்கரமான கொலைகளுக்கெல்லாம் காரணம் இப்பொழுதுதான் எனக்கு புலப்படுகிறாப்போல் தோன்றுகிறது . . .

**கண்ணன்:** சொல், எனக்கும் தெரியட்டும் . . .

**காந்தாரி:** நான் நிச்சயப்படுத்த முடியவில்லை. என்னைச் சிறிது நேரம் தனியே விடு . . . போ.

**கண்ணன்:**இதற்கெல்லாம் காரணம் திருதராஷ்டிரர்தான் என்று எண்ணுகிறாயா? அவர் தம் மக்களிடமும் சேனைகளிடமும் இரக்கங் காட்டாமல் அதிக உறுதியாயிருந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறாயா?
**காந்தாரி:** அவரை ஏன் குற்றம் சொல்லுகிறாய்?

**கண்ணன்**: அவர்தான் இந்தப் பதினெட்டு நாள் இரத்தப் பெருக்கிற்கும் காரணம் என்று சிலர் சொல்லுகிறார்கள். சாரதி குருடாயிருந்து, குதிரைகளும் அடங்காத முரடுகளாயிருந்தால்?

**காந்தாரி**: எனது நாதரை, பிரபுவை, நீ இவ்வாறு நிந்திக்கலாகுமா? அவருடைய அடியாளாகவும், பத்தினியாகவும் இருப்பதில் பெருமை கொண்டுள்ள என் முன்பா இப்படிப் பேசுகிறாய்?

**கண்ணன்**: காரணம்தான் என்ன என்று நினைக்கிறாய்? ராஜவம்சத்தின் உதிரம் கட்டார்களிலும், கத்திகளிலும், வாள்களிலும் பூசப்படத்தான் வேண்டும் என்று பிறப்பிலிருந்தே சாபக்கேடா?

**காந்தாரி**: அந்தோ! ஒருவர் கழுத்தை ஒருவர் நெரிக்கத்தானா வீரமும் பலமும் பயன்படவேண்டும்! அவர்கள் எல்லோரும் கைகொத்துக்கொண்டு உழைத்தால் நமது பாரதவர்ஷத்தை இந்திர போகங்களோடு கூடிய இன்னொரு ஸ்வர்க்கமாய்ச் செய்திருக்கமாட்டார்களா? ஐயோ, என் அருமை மக்களே! இடையீடில்லாத துன்பப் படுகுழியில் என்னைத் தள்ளிவிட்டு நீங்கள் யாவருமே மடியவேண்டுமா? ஒவ்வொரு நாள் காலையிலும், என் ஆசீர்வாதம் பெற்று, எவ்வளவு வேகமாய் பாய்ந்தோடினார்கள்! அந்தோ! என் உள்ளம் கல்லினால் செய்யப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும்! 'தர்மமே ஜயம்' என்று அவர்களை வாழ்த்தி இருப்பேனா? நான் தாயாக இருக்கவில்லை, அவர்களின் யமனாக இருந்தேன். என் செல்வ மக்களை நான் காப்பாற்றி இருக்கக்கூடாதா, பாவி?

**கண்ணன்**: உன் பவித்திரமான ஆசை, உன் கண்கள் அவிந்ததிலும், உன் மக்கள் பட்டதிலும் நிறைவேறிவிட்டது!

**காந்தாரி**: ஆஹா! கடைசியாக, நான்தானா காரணம்? அவர்களை பெற்றெடுத்த தாயா? பாவியான எனக்கு எது வேண்டாலும் வரட்டும்!ன் என் பதிக்காகத் தியாகம் செய்தேன்! ஓ! என் மக்களுக்காக நான் ஒரு தவமும் செய்தேனில்லையே! தாய் கவனிப்பு இல்லாமலன்றோ என் மக்கள் . . . . .

(திரை)

********